முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| ஓ.எஸ்.எண்.342/2021 | பிவா.த.சா.2 |
| பெயர்: மகாலட்சுமி | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்:24.06.2026 |

1872 ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

இத்துடன் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை–

நான் 5ம் வகுப்புவரை படித்துள்ளேன். தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். 01.09.2020ம் தேதி பிரதிவாதி பத்திர அலுவலகத்தில் வைத்து எழுதிக்கொடுத்த ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் கிரைய ஒப்பந்த ஆவணம் என்றால் அது வட்டிக்காக எழுதிக்கொடுக்கப்பட்டதாகும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 30.04.2021ம் தேதி வாதி ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. போன் மூலம் பேசினோம். அதன் பின்னர் 18.06.2021ம் தேதி மீண்டும் வாதி ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன். வட்டி செலுத்தியதற்கு ஆதாரமாக ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வட்டி கொடுத்ததற்கு வாதி எழுதிக்கொடுத்துள்ளார். அதை தாக்கல் செய்துள்ளோம். ரூ.10 லட்சத்தை வாதி வங்கி மூலம்

கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ரூ.10 லட்சம் சொத்தை கிரையம் வாங்குவதற்காக வாதி கொடுத்த பணம் என்றும், நான் கூறுவதுபோன்று வட்டிக்காக கடன் வாங்கவில்லை என்றும் வாதிக்கு வட்டி தொகை எதுவும் செலுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதியிடம் வாங்கிய பணத்தை மோசடி செய்யவேண்டி சொத்தை கிரையம் கொடுக்காமல் காலம் கடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.06.24 17:27:44 +0530

Principal District Judge,
Dindigul.